பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 04 2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – பிரிட்டன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல், லண்டனில் பிரிட்டன் வர்த்தக அமைச்சர் திரு. **Jonathan Reynolds**-ஐ சந்தித்துப் பேசினார்.

2. நாளொன்றுக்கு ஒரு பில்லியன் மின்னணுப் பணப் பரிவர்த்தனை என்ற இலக்கை எட்டுவது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. வங்கிக் கடன் மோசடி வழக்கில் தமக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட கைது வாரண்டை எதிர்த்து வைர வியாபாரி மெகுல் சோக்சி தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை இன்று பெல்ஜியம் நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது.

4. ஏமனில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில் ஆப்பிரிக்காவை சேர்ந்த புலம்பெயர்ந்த 68 பேர் உயிரிழந்தனர்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

இந்தியா – பிரிட்டன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், லண்டனில் நேற்று பிரிட்டன் வர்த்தக அமைச்சர் திரு. **Jonathan Reynolds**-ஐ சந்தித்துப் பேசினார்.

இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக பிரிட்டன் சென்றுள்ள திரு. கோயல், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை வலுப்படுத்துவது குறித்தும் பிரிட்டன் அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாகவும், பேச்சுவார்த்தையை விரைவாக முடிக்க இருதரப்பிலும் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

ஏற்கனவே கடந்த பிப்ரவரி மாதம் பிரிட்டன் அமைச்சர் திரு. ஜோனதன் புதுதில்லி வந்தபோது இந்த ஒப்பந்தம் தொடர்பாக இந்திய பிரதிநிதிகளுடன் பேச்சுகள் நடத்தி இருந்தார்.

இருதரப்பும் பரஸ்பரம் பயனடையும் வகையில் இந்த ஒப்பந்தம் அமைய வேண்டும் என்று அப்போது இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

<<<<>>>>

நாளொன்றுக்கு ஒரு பில்லியன் மின்னணுப் பணப் பரிவர்த்தனை என்ற இலக்கை எட்டுவது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மின்னணு பணப் பரிவர்த்தனையை மேலும் அதிகரிப்பது குறித்து புதுதில்லியில் நேற்று உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

தற்போதுள்ள மின்னணு பணப்பரிவர்த்தனை முறையை மேலும் விரிவுபடுத்துவது மற்றும் பொதுமக்களுக்கு பாதுகாப்பான பரிவர்த்தனையை உறுதிப்படுத்துவதன் அவசியத்தை அமைச்சர் இந்தக் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

இந்தியாவில் உள்ள மின்னணு பரிவர்த்தனையை சர்வதேச அளவில் விரிவுபடுத்த வேண்டும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் நிதியமைச்சகம், இந்திய ரிசர்வ் வங்கி, தேசிய பணப் பரிவர்த்தனைக் கழகம் ஆகியவற்றின் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

வங்கிக் கடன் மோசடி வழக்கில் தமக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட கைது வாரண்டை எதிர்த்து வைர வியாபாரி மெகுல் சோக்சி தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை இன்று பெல்ஜியம் நீதிமன்றத்தில் நடைபெற உள்ளது.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் கடன் பெற்றுவிட்டு அதைத் திருப்பி செலுத்தாமல் மெகுல் சோக்சி வெளிநாடு தப்பிச் சென்று தலைமறைவாக வாழ்ந்து வந்தார்.

அவரது இருப்பிடத்தை அறிந்த பின்னர் அவரைக் கைது செய்து நாடு கடத்தி வர மும்பையில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்தது.

<<<<>>>>

பூந்தமல்லி – கலங்கரைவிளக்கம் வழித்தடத்தில் பூந்தமல்லி – போரூர் இடையே பணிகள் முடிவடைந்த மெட்ரோ ரயில் பாதையில் ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்ட சோதனை ஓட்டம் நேற்று நடைபெற்றது.

9 கிலோ மீட்டர் தொலைவுக்கு நடத்தப்பட்ட இந்த சோதனை வெற்றி பெற்றதாகவும், மின் இணைப்பு பணிகள் மற்றும் தண்டவாளப் பணிகள் இந்த சோதனையின்போது பரிசோதிக்கப்பட்டதாக செய்தியாளர்களிடம் பேசிய சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சித்திக் கூறினார்.

விரைவில் போரூரில் இருந்து பூந்தமல்லி வரை சோதனை ஓட்டம் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

திடீர் மின்வெட்டு காரணமாக பாதிக்கப்பட்ட ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் நாடுகளில் இயல்பு நிலை திரும்ப தொடங்கியுள்ளது.

நாட்டில் பாதி நகரங்களில் மீண்டும் மின்சாரம் இயல்பு நிலையை எட்டியுள்ளதாக ஸ்பெயின் பிரதமர் திரு. **Pedro Sanchez** தெரிவித்துள்ளார்.

இந்த மின்வெட்டுக்கு சைபர் தாக்குதல் காரணமல்ல என்று போர்ச்சுகல் பிரதமர் திரு. **Luis Montenegro** தெரிவித்துள்ளார்.

போர்ச்சுகளல் நாடு முழுவதும் மீண்டும் மின்சாரம் இயல்பு நிலையை அடைய ஒரு வாரம் ஆகும் என்று அந்நாட்டின் மின் வினியோகத்தில் தனியார் நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டிலும் சில இடங்களில் நேற்று திடீர் மின்வெட்டு ஏற்பட்டது.

<<<<>>>>

நடப்பாண்டுக்கான பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

சமூகசேவை, அறிவியல், பொறியியல், மருத்துவம், இலக்கியம், கல்வி, கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை ஆற்றியவர்களுக்கு ஆண்டுதோறும் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக 71 பேருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் 4 பேருக்கு பத்ம விபூஷன் விருதும், 10 பேருக்கு பத்மபூஷன் விருதும், 57 பேருக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டது.

தமிழகத்தைச் சேர்ந்த 13 பேருக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

திரைப்பட நடிகர் திரு. அஜித்குமார், நடனக்கலைஞரும், நடிகையுமான திருமதி ஷோபனா, தொழிலதிபர் திரு. நல்லிகுப்புசாமி ஆகிய மூவருக்கு பத்மபூஷன் விருது வழங்கப்பட்டது.

மிருதங்க கலைஞர் திரு. குருவாயூர் துரை, சமையல் கலைஞர் திரு. செஃப் தாமோதரன், தெருக்கூத்துக் கலைஞர் புரிசை கண்ணப்ப சம்பந்தன், கிரிக்கெட் வீரர் திரு. ரவிச்சந்திரன் அஷ்வின், சிற்ப கலைஞர் திரு. ராதாகிருஷ்ணன் தேவசேனாதிபதி உள்ளிட்ட தமிழகத்தைச் சேர்ந்த 10 பேருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

வருங்காலத்தில் ஏராளமானோர் சிற்பக் கலையில் ஈடுபட ஊக்குவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக சிற்பக் கலைஞர் திரு. ராதாகிருஷ்ண தேவசேனாதிபதி கூறினார்.

மத்ம விருது பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த பல்துறையைச் சேர்ந்தவர்களுக்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலையடுத்து, வெளியுறவுத்துறை அறிவுறுத்தலின்பேரில் பாகிஸ்தானியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மருத்துவ விசாக்களும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஏமனில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில் ஆப்பிரிக்காவை சேர்ந்த புலம்பெயர்ந்த 68 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்காக 800க்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று ஏற்கனவே அமெரிக்கா அறிவித்திருந்தது.

அமெரிக்க அதிபராக திரு. டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் ஏமன் மீது தீவிரமான தாக்குதலை நடத்த உத்தரவிட்டிருந்தார்.

<<<<>>>>

ஈரானில் **Shahid Rajaee** துறைமுகத்தில் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த வெடிவிபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 70ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த ஆயிரத்து 200க்கும் அதிகமானோருக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

துறைமுகத்தில் சரக்குப் பெட்டகங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், தீ முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஈரான் மாகாண ஆளுநர் திரு. **Mohammed Ashouri** கூறினார்.

தொடர்ந்து அந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாக ஈரான் உள்துறை அமைச்சர் திரு. **Eskandar Momeni** தெரிவித்துள்ளார்.

இந்த வெடிவிபத்துக்கு நாசவேலை காரணமல்ல என்றும், கவனக்குறைவே காரணம் என்றும் அவர் கூறினார்.

இருப்பினும் முழுமையான விசாரணைக்கு ஈரான் அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறைகள் அடுத்த மாதம் 7ஆம் தேதி தொடங்க உள்ளன.

நேற்று வாடிகனில் கர்தினல்களின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் தில்லி கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-----------

முத்தரப்பு மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது இரண்டாவது ஆட்டத்தில் தென்னாப்பிரிக்க அணியை எதிர்கொள்கிறது.

கொழும்பில் இப்போட்டி காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**